

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் ஓரணியில் தமிழ்நாடு. அடிப்படையில் தி.மு.க உறுப்பினர்கள். சேர்க்கும் பணியில் தீவிரமாக பணியாற்றி மாவட்ட முதல் மாவட்ட மாக வருவதற்கு தீவிரமாக பணியாற்ற மாநகர. ஒன்றிய, பகுதிகழகம். கோட்ட கழக உறுப்பினர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர். இரா .இராஜேந்திரன் கேட்டுக்கொண்டார் கூட்டத்தில். மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு, மு.கார்த்திகேயன். தொகுதி பொறுப்பாளர். பி.ஏ.ஆர். இளங்கோவன். தலைமை செயற்குழு உறுப்பினர்கள். சி.ராஜேந்திரன், கே.டி.மணி. தாமரைக்கண்ணன். மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர் ஜூலை 28.

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு”-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி (கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன்) எனது தலைமையில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை 29072025 மாலை 4.00 மணியளவில் நெய்வேலி தொ. மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது. அதுசமயம் ஒன்றிய கழக, நகர கழக , பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கிளை, வார்டு, பாகம், இளைஞரணி அமைப்பாளர்கள் நியமித்தல். 2. சட்ட மன்ற தொகுதியில் கலைஞர் நூலகம் அமைப்பது. 3. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்கையில் இளைஞரணி இணைந்து பணியாற்றுவது தொடர்பாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வெள்ளகோவில் ஒன்றியம் - முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் 5 புதிய சாலை மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூலை 28 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு. பெ.சாமிநாதன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ. மலர்விழி தலைமையில் 24.07.2025வியாழக்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி, அத்தாம்பாளையம் பிரிவில் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.72.97 இலட்சம் மதிப்பீட்டில் முத்தூர் மூலனூர் சாலை முதல் வள்ளியம்மாள் நகர் வழியாக மோளக்கவுண்டன்வலசு ஆதிதிராவிடர் குடியிருப்பு வரை தார் சாலை மேம்பாட்டுப்பணி, ரூ.51.53 இலட்சம் மதிப்பீட்டில் சேனாபதிபாளையம் முதல் ஒத்தக்கடை நாட்ராயன்கோவில் சாலை வழியாக மயானம் வரை தார்சாலை மேம்பாட்டுப்பணி, பிரதான் மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டில் புஷ்பகிரி குழலிபாளையம் முத்தூர் சாலை முதல் பழனிகவுண்டன்வலசு வரை சாலை மேம்பாட்டுப்பணி, முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் என்.ஜி.எம் சாலை முதல் வேலம்பாளையம் வழியாக அத்தாம்பாளையம் சாலை வரை தார் சாலை மேம்பாட்டுப்பணி, முத்தூர் பேரூராட்சி, தொட்டியபாளையம் வார்டு எண்.5ல் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் மற்றும் கலைஞர் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் தொட்டியபாளையம் சமத்துவபுரம் குறுக்கு வீதிகளில் உள்ள தார் சாலை பலப்படுத்தும் பணி என மொத்தம் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தார்சாலை மேம்பாட்டுப் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்து க்குமார், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், நகர கழக செயலாளர்கள் சபரி எஸ்.முருகானந்தம், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன், ஒன்றிய அவைத்தலைவர் தெண்டபாணி, மாவட்ட பிரதிநிதிகள் சிவக்குமார், வெள்ளிங்கிரி, ஒன்றிய இளைஞர் அமைப்பாளர் ஆதவன் ஜெகதீஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அழகரசன், முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்த ராம்பாள், வெள்ளகோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராகவேந்திரன், சரவணன் உதவி பொறியாளர் லோகேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கொடுமுடி அரசு மருத்துவமனையில் ரூ.1.72 லட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டுமான பணி அடிக்கல் நாட்டு விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் துவங்கி வைத்தார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் ”ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி BDA, BLA2, மற்றும் கழக நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர மன்ற துணை தலைவர் டி.குணா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் நவநீதகிருஷ்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் நாராயணன், நகர மன்ற உறுப்பினர்கள் ரவிக்குமார், கோவிந்தன், S.சக்திவேல், வெங்கடேசன், தொ.மு.ச. பி.கே.சரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாநகராட்சி வார்டு எண் 43, ஜீவானந்தா சாலை பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கும்பகோணம் மாநகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்

# பல்வேறு துறைகளில் விண்ணப்பிக்கப்பட்ட 15 மனுக்களுக்கு உடனடி தீர்வு!

## அமைச்சர் கோவி.செழியன் – சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

தஞ்சாவூர், ஜூலை 28 -

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் “ஸ்டாலின் திட்டத்தின்” கீழ் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று பல மனுக்களுக்கு உடனேதீர்வு காணப்பட்டது.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சிதம்பரத்தில் தொடங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் ஒரு பகுதியாக தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சிக் குட்பட்ட கும்பேஸ்வரன் திருமஞ்சன வீதியில் உள்ள தங்கம்மாள் மண்டபத்தில் 14, 15, 16 ஆகிய வார்டுகளுக்கான “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழ்ழகன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் சரவணன், ஆணையர் காந்திராஜ், சார் ஆட்சியர் ஹிருத்தியா விஜயன் மற்றும் மாநகர் நல அலுவலர் டாக்டர் திவ்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக பகுதி செயலாளர் எஸ்.செல்வராஜ் அனைவரையும் வரவேற்றார்.

முகாமில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் மற்றும் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் பங்கேற்று முகாமை தொடங்கி வைத்தனர்.

முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டனர். மேலும் நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் விண்ணப்பித்த மனுவில் உடனடி தீர்வு பெற்ற உத்தரவை பயனாளிகளுக்கு வழங்கி சிறப்பித்தனர்.

இம்முகாமில் வருவாய்த்துறை, மின்சா ரத்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. மேலும் நேற்று காலை முதல் மாலை வரை நடைபெற்ற முகாமில் சுமார் 700 மனுக்கள் பெறப்பட்டு பல்வேறு துறைகளை சார்ந்த 15 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் மத்திய ஒன்றிய செயலாளர் உள்ளூர் கணேசன், மாநகர அவைத்தலைவர் எஸ்.வாசுதேவன், டி.ஆர்.அந்தராமன், மாமன்ற உறுப்பினர்கள் அய்யப்பன், தீபா, பாலாஜி, வார்டு செயலாளர்கள் ஜெகந்நாதன், கோபி, குமார், வட்டாட்சியர் சண்முகம் மற்றும் கட்சி நிர்வாகிகள், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### சென்னை வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்: தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் சென்னை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எல்.அருளரசன் அவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால்; சென்னை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஜூலை 16 (புதன்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு சு.சேகர் (எ) சந்திரசேகர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**

**திரு. சு.சேகர் (எ) சந்திரசேகர்,** 37, துரை சாகிப் தெரு, இராயபுரம், சென்னை-600 013 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.07.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தரங்கம்பாடியில் கலைஞர் பிறந்த நாள் விழா தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன், திருப்பத்தூர் ரஜினி, சின்னமாரியப்பன் சிறப்புரை!

மயிலாடுதுறை. ஜூலை 28 -

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூர் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் தரங்கம்பாடி காத்தான்சாவடி கடைத் தெருவில் நடைபெற்றது.

தெருமுனைப் பிரச்சார கூட்டத்திற்கு தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா தலைமை தாங்கினார். தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பாரி.சரவணன் வரவேற்றார். தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் அவைத் தலைவர் எஸ்.கந்தசாமி, மாவட்ட பிரதிநிதியும், தரங்கம்பாடி பேரூராட்சி துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி ஏ.சடகோபன், துணைச் செயலாளர்கள் த.மதியழகன், எஸ்.பால்ராஜ், ச.அம்பிகாபிரபு, பொருளாளர் வி.கண்ணதாசன், ஒன்றிய பிரதிநிதிகள் எம்.வீரமணி, கே.ராஜா, ஏ.கே.சந்துரு, எஸ்.இக்பால், ஜி.செந்தில் குமார், தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.சதிஷ்குமார், பி.மணி கண்டன், எஸ்.அமுல்ராஜ், ஏ.ஸ்டாலின், பேரூர் தகவல் தொழில் நுட்ப அணி ஏ.மணிகண்டன், வசந்த், எம்.சித்திரவள்ளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, தலைமைக் கழக பேச்சாளர்கள் திருப்பத்தூர் ரஜினி, சின்னமாரியப்பன், கழக இளம் பேச்சாளர் மா.க.சூர்யா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்தவிஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்செ. பிரசன்னா நன்றி கூறினார்.



திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதி 1 மற்றும் பகுதி2 சு.பள்ளிபட்டு ஆகிய பகுதிகளில் 1000 பயனாளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி இலவச வீட்டுமனைப்பட்டாவினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகரசெயலாளர்.சு.ராசேந்திரன், ஒன்றிய செயலாளர்கள்.கே.ஏ.குணசேகரன், கே.எஸ்.எ.மோகன்ராஜ், நகர சேர்மென்.சங்கீதாவெங்கடேஷ், மாவட்ட கவுன்சிலர்.சி.கே. சுப்பிரமணி, மாவட்ட பொறுப்பாளர்கள். வி.அன்பழகன்,தசரதன், நகர வார்டு உறுப்பினர்கள். செல்விஅசோகன், கோபிநாத், ஜீவிதாபார்த்திபன், கலீல், சுதாகர் சீனிவாசன்,கார்த்திக், ஊராட்சிமன்ற தலைவர், கவுன்சிலர், BLA2, BLC, BDA கிளை கழக உறுப்பினர்கள், வார்டு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.